வர்த்தகத் தொடக்கப் புள்ளியை முன்வைத்து

# ஜிஎம் கிள்ளானின் பிரத்தியேக செயலி அறிமுகம்

கிள்ளான், அக். 28-
எளிதான வர்த்தக நடவடிக்கையை மேற்கொள்ள வகைசெய்யும் செயலி அறிமுகத்தின் வழி தென்கிழக்காசியாவில் ஆக்கப்பூர்வமான பேரங்காடியாக வேண்டும் என ஜிஎம் கிள்ளான்







மையத்தின் இலக்கு மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் இந்தச் செயலியை சிலாங்கூர் மாநில வீடமைப்பு, நகர்ப்புற நல்வாழ்வு, தொழில்முனைவர் மேம்பாட்டுத் துறைகளுக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்ஸியா இஸ்மாயில் அறிமுகம் செய்துவைத்தார். இந்த அறிமுக நிகழ்ச்சி கிள்ளானில் உள்ள ஜிஎம் கிள்ளான் விற்பனை மையத்தில் நடைபெற்றது.

இந்தச் செயலி பயன்பாட்டின் வழி இன்னும் அதிகமானோர் குறிப்பாக இளம் தலைமுறையினர் தொழில்முனைவர்களாக உருமாறும் முயற்சி நனவாக்கப்படுகிறது. தற்போதைய தொழில்நுட்ப மேம்பாட்டுத் தேவைக்கு ஏற்ப ஜிஎம் கிள்ளானில் வர்த்தக சமூக செயலியானது வாடிக்கையாளர்களுக்கு எளிதாகவும் விரைவாகவும் தொழில்முனைவர் வாய்ப்புகளையும் வசதிகளையும் ஏற்படுத்தித் தருகிறது.

இந்தச் செயலியில் இடம்பெற்றுள்ள பிரத்தியேக இணைப்பின் வழி வாடிக்கையாளர்கள் தேதியையும் சந்திப்பு நடத்துவதற்கான கால அவகாசத்தையும் விற்பனை செய்ய விரும்பும் தயாரிப்புகளின் தகவல்களையும் இணைக்க வேண்டும். அதன்பிறகு வாடிக்கையாளர்களுடன் ஏற்ற விற்பனையாளர்களை ஜிஎம் கிள்ளான் தரப்பு இணைத்து வர்த்தக நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும்.

இது தவிர தங்கள் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்தவும் நேரடி ஒளிபரப்பு செய்யவும் வாடிக்கையாளர்கள் ஸ்டூடியோவைப் பயன் படுத்திக்கொள்ளலாம். ஜிஎம் கிள்ளான் என்பது வர்த்தகர்களும் வாடிக்கையாளர்களும் தங்கள் வருமானத்தை ஈட்டும் ஓர் இடமாகும் என்பதைப் பலரும் அறிவர்.


ஆனால் அதனை எப்படித் தொடங்குவது என்பது அவர்களுக்குத் தெரியாது. இந்தச் செயலியின் வழி நாங்கள் அந்தத் தொடக்கப் புள்ளியை நாங்கள் அவர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளோம்.

ஜிஎம் கிள்ளான் தொடர்புப் பிரிவு அதிகாரி நோர்ஸுஹைடா ஒத்மான் தெரிவித்தார். இதற்கிடையே இந்தச் செயலியைப் பதிவிறக்கம் செய்யும் முதல் ஆயிரம் வாடிக்கையாளர் களுக்குச் சிறப்புப் பற்றுச்சீட்டுகளும் காத்திருக்கின்றன.

சுபாங், ஆரா டாமன்சாரா குடியிருப்பில்

# இன ஒற்றுமையைக் காட்டும் தீபாவளிக் கொண்டாட்டம்

சுபாங், அக். 28-
சுபாங் வட்டாரத்திலுள்ள குடியிருப்புப் பகுதி ஆரா டாமன்சாரா. இந்த ஆண்டு தீபாவளிக் கொண்டாட்டத்தின்போது இந்த வட்டாரத்திலுள்ள சகோதர இனத்தவர்களுடன் சேர்ந்து வித்தியாசமான தீபாவளியைக் கொண் டாடியதை மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் பகிர்ந்துகொண்டார் திருமதி கிரிஜா பாலகிருஷ்ணன்.



குடும்பத்தினருடன் கிரிஜா பாலகிருஷ்ணன் (நடுவில்)



இந்தக் குடியிருப்புப் பகுதியில் நீண்ட காலமாகத் தன் மகன் கிரியுடன் வசித்துவருகிறார் கிரிஜா. இந்தக் குடியிருப்பில் வசிப்போருள் பெரும்பாலோர் சீனர்கள். ஒருசிலரே இந்தியர்கள். அண்மையில் அவரின் அண்டை வீட்டுக்காரர் ஒருவர் நாம் எல்லாரும் ஒரே வட்டாரத்தில் வசித்தாலும் நாம் ஒருவருக் கொருவர் பேசிக்கொள்வ தில்லை, நலன் விசாரித்துக் கொள்வதில்லை எனக் குறைபட்டுக்கொண்டார்.

குடியிருப்பாளர்களிடையே நிலவும் இந்த நிலைமையை எப்படி மாற்றியமைப்பது என நாங்கள் யோசித்தோம். இதற்கிடையே எங்களின் வீடுகளைச் சுற்றியிருந்த பயன்படுத்தப்படாத புறம்போக்கு நிலங்களில் எங்களுள் சிலர் காய்கறிகளையும் தாவர உணவுகளையும் பயிரிடத் தொடங்கினோம்.

எங்களுக்குள் இதன்மூலம் தொடர்புகள் ஏற்பட்டது என்பதோடு ஒருவருக் கொருவர் தகவல்களையும் கருத்துகளையும் பரிமாறிக் கொள்ளும் வழக்கமும் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து இந்தத் தீபாவளியை எப்படி எல்லா அண்டை அயலாரையும் இணைத்துக்கொண்டு கொண்டாடுவது என்றும் அதன்மூலம் எங்களுக்கு இடையில் அணுக்கமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது என்றும் நாங்கள் திட்டமிட்டோம்.

நாங்கள் காய்கறிகள்



பயிரிட்ட நிலப்பகுதியில் நாங்கள் அனைவரும் இணைந்து ஒரு தீபாவளி விருந்து நடத்த முடிவு செய்தோம். எங்கள் வீட்டில் இருந்து சில உணவுகளைத் தயார்செய்தோம். அதேபோல விருந்துக்கு வரும் அண்டை வீட்டார்களும் அவரவர் வசதிக்கேற்ப சில உணவுகளைத் தயாரித்துக் கொண்டுவந்தார்கள்.

இத்தனை வருடங்களாக ஒரே குடியிருப்பில் வசித்துவந்தாலும் ஒருவருக்கொருவர் சந்தித்துக் கொள்ளாமல் வாழ்ந்து வந்தவர்கள் அந்தத் தீபாவளி விருந்தில் ஒன்றுகலந்து தங்களின் அன்பையும் குசலங்களையும் பரிமாறிக் கொண்டார்கள். இது எங்களுக்குப் புதிய அனுபவமாக இருந்தது. பல இனங்களைக் கொண்ட நம் நாட்டில் ஆரம்பக் காலங்களில் நிலவிவந்த இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை, கலாச்சாரப் பரிமாற்றங்கள், ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ளும் பொதுநலத்தன்மை மற்றவர்களின் கலாச்சாரத்தை அனுபவப்பூர்வமாக அறிந்துகொள்ளும் ஆர்வம் - இவையெல்லாம் காலப்போக்கில் வெகுவாகக் குறைந்துவிட்டதை நான் அப்போது உணர்ந்தேன்.

வீடுகள் பெரிதாகிவிட்டன. குடியிருப்புப் பகுதிகள் விரிவடைந்துவிட்டன. ஆனால் அந்தளவுக்கு மக்களிடையே புரிந்துணர்வும் முன்பு போன்ற நல்லுறவுகளும் வளரவில்லையோ என நினைக்க வைத்தது எங்களின் தீபாவளிக் கொண்டாட்டம். இந்த விருந்துக்கு வந்த சிலர் - குறிப்பாக சீனர்கள் தாங்களும் இந்தியப் பாரம்பரிய உடையில் வரவேண்டும் என விரும்பினர்.

அவர்களின் ஆசையைப் பூர்த்திசெய்ய நாங்களும் வீட்டில் இருந்த எங்கள் சேலை, வேட்டிகளை அவர்களுக்கு வழங்கியதோடு அவர்களுக்கு அதை எப்படி அணிவிப்பது என்பதையும் நாங்களே கற்றுக்கொடுத்து அணிவிக்கவும் செய்தோம். அந்தச் சீனப்பெண்கள் அழகான சேலையில் விருந்தில் கலந்துகொண்டதும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. நாங்கள் எல்லாம் ஒன்றுகூடி சந்தோஷமாக விருந்துண்ணும்போது எதிர்பாராமல் மழைவந்துவிட்டது. ஆனாலும் வந்தவர்கள் யாரும் கலைந்துசெல்லவில்லை. பெரிய பெரிய குடைகளின் கீழ் அமர்ந்துகொண்டு எங்களுக்கு இடையில் ஏற்பட்டிருந்த நட்பையும் உறவையும் தொடர்வதில் அனைவரும் ஆர்வம் காட்டினோம்.

இவ்வாறாக இந்த ஆண்டு தீபாவளி ஆரா டாமன்சாரா குடியிருப்பில் வசிப்பவர்களும் எங்கள் குடும்பத்தினரும் மறக்க முடியாத தீபாவளியாக அமைந்தது என கிரிஜா பாலகிருஷ்ணன் மகிழ்ச்சியுடன் கூறினார்.

நான் செய்தியாளர் திரட்டேடு பயணத்தில்

# மக்களோடு மக்கள் ஓசை

## புதுப்புதுச் சொற்களை அறிந்து கொள்ளும் புத்துணர்வைத் தரும் புத்தாக்கச் சிந்தனை

● கவின்மலர்

'நான் செய்தியாளர்' திரட்டேடு பயணத்தில் மக்களோடு மக்கள் ஓசை திட்டம் புதுப்புதுச் சொற்களை அறிந்து கொள்ளும் புத்துணர்வைத் தரும் புத்தாக்கச் சிந்தனையாக அமைந்துள்ளது என்று செபெராங் பிறை, தாசேக் பெர்மாய் தமிழ்ப்பள்ளி தலைமையாசிரியர் முருகன் லோகநாதன், திரட்டேடு திட்டப் பொறுப்பாசிரியர் திருமதி காளியம்மாள் காளியப்பன் ஆகியோர் தெரிவித்தனர்.





இத்திட்டத்தின் காரணமாக மாணவர்கள் ஆர்வத்துடன் நாளிதழைப் படிக்கத் தொடங்கியிருப்பதுடன் நாளிதழ்களில் வரும் புதுப்புதுச் சொற்கள் அறிந்துக் கொள்கின்றனர். இதன்வழி அவர்களின் மொழி வளம் மேம்படுவதுடன்,தாங்கள் அறிந்துள்ள சொற்களையும் கருத்துகளையும் தங்களின் கட்டுரைகளிலும் வாக்கியங்களிலும் பயன்படுத்தும் சூழ்நிலை உருவாகியுள்ளது என்று இப்பள்ளியின் ஆசிரியர்களான திருமதி கோமதி த/பெ இராமையா, திருமதி காயத்ரி த/பெ மாரிமுத்து ஆகியோர் கருத்துரைத்தனர்.

போட்டிக்காகப் பழக்கமாகியுள்ள நாளிதழ் வாசிக்கும் பழக்கம் வாழ்நாள் வழக்கமானால் பொது அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்யும் என்று தலைமையாசிரியர் முருகன் லோகநாதன் நம்பிக்கை தெரிவித்தார்.

# வாய்ப்பு, தேர்வு, நீதி கருப்பொருளுடன் தொழில் சிகிச்சை தினக் கொண்டாட்டம்

● எம். அன்பா

புத்ராஜெயா, அக். 28-
மலேசிய சுகாதார அமைச்சும் புத்ராஜெயா மருத்துவமனை மேலாண்மைத்துறையும் இணைந்து தொழில் சிகிச்சை புனர்வாழ்வு நிகழ்ச்சியை நடத்தின.

இவ்வாண்டு உலகளாவிய நிலையில் வாய்ப்பு, தேர்வு, நீதி என்கின்ற கருப்பொருளுடன் உலக தொழில் சிகிச்சை தினக் கொண்டாட்டம் நடைபெற்றது என சுகாதார அமைச்சின் துணைத் தலைமை இயக்குநர் டத்தோ டாக்டர் அஸ்மாயானி கலிப் கூறினார்.



பலதரப்பட்ட சுகாதாரப் பிரச்சினைகளுக்கு ஆளாகிய நோயாளிகளுக்கு தெரபி சிகிச்சையின் துணை வழி சுபிட்சமான வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வதற்கான அடிப்படைப் பயிற்சி மேலும் அது சார்ந்த நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன என அவர் தெரிவித்தார்.

உலகம் முழுவதும் உள்ள தொழில்சார் சிகிச்சையால் பலரது வாழ்க்கை மீண்டும் வழக்க நிலைக்குத் திரும்புவதற்கு பயன்மிக்க பயிற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள சுகாதார அமைச்சு துணை புரிகிறது என்றார் அவர்.

சிறியவர் முதல் பெரியவர் வரை நிபுணத்துவமிக்க பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்ற சுகாதார அமைச்சின் தொழில் சிகிச்சைப் பொறுப் பாளர் நோரா அமிட் தலைமை யில் ஆற்றல்மிக்க பயிற்சிகள் சுகாதார அமைச்சுடன் இணைந்து வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. புத்ராஜெயாவில் 2022 ஆம் ஆண்டிற்கான உலக தொழில்சார் சிகிச்சை தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு நிகழ்ச்சியில் சுகாதார அமைச் சின் முக்கியப் பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.